# கலைஞரும் நானும்

45

“**யா**ரைப் பற்றிப் பேசினால் என் நெஞ்சமெல்லாம் நிறையுமோ, யாரைப் பற்றிப் பேசினால் என் கண்கள் கலங்குமோ, யாரைப் பற்றிப் பேசினால் என் நாவின் திறன் கூடுமோ அந்தத் தலைவரைப் பற்றிப் பேசுவது என் பேறு” என முத்தமிழறிஞர் கலைஞருடனான நினைவுகளைப் பகிர்கிறார் திராவிட இயக்கத் தமிழர் பேரவை பொதுச்செயலாளர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன்.

■ பேராசிரியர் **சுப.வீரபாண்டியன்**



# “என் இரண்டாவது தந்தை..!”

“**நா**ன் சிறுவனாக இருந்தபோதே முத்தமிழறிஞர் கலைஞரை சந்தித்திருக்கிறேன். தலைவர் கலைஞர் அவர்கள் எங்கள் இல்லத்துக்கு வந்திருக்கிறார். என் தந்தையார் இராம சுப்பையா - அம்மா விசாலாட்சி இருவரும் சுயமரியாதை இயக்கக் காலத்தில் இருந்தே இயக்கத்தில் இருந்தவர்கள். தி.மு.கழகம் தொடங்கிய முதல் நாளிலிருந்து அப்பா கழகத்தில் இருந்தவர். எனவே, காரைக்குடியில் நிகழ்ச்சிகளுக்கு வருகிற போது அறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் என கழகத் தலைவர்கள் எங்கள் வீட்டுக்கு வருவார்கள். அதேபோல், பல பொதுக்கூட்டங்களிலும் கலைஞரைப் பார்த்திருக்கிறேன்.

கலைஞரை நேரில் சந்தித்துப் பேசும் வாய்ப்பு அமைந்தது நெருக்கடி நிலை காலத்தில்தான். அதுவரை எம்.ஜி.ஆர் ரசிகனாகவும், ஆதரவாளனாகவும் நான் இருந்தேன். என் நெஞ்சில் இருந்த கதாநாயகன் தீமைகளை எதிர்க்கிறவன். ஆனால், எம்.ஜி.ஆர் நெருக்கடி நிலைக்கு ஆதரவாக இருந்தார். அப்போது கலைஞர் அதை எதிர்த்தார். அதனால், கலைஞர் கதாநாயகனாக உயர்ந்து நின்றார். அந்த நேரத்தில் தலைவர் கலைஞரைச் சந்திக்க அப்பா அழைத்துச் சென்றார். ‘என்னுடைய கடைசி மகன்’ என அப்பா அறிமுகம் செய்து வைத்தார்.

அந்தக் காலகட்டத்தில்தான் ‘முரசொலி’ வாங்கும் பழக்கமும் எனக்கு உருவானது. எல்லோரும் ‘முரசொலி’ வாங்க அச்சப்பட்ட காலத்தில், நான் அதை எல்லோரும் பார்க்கிறமாதிரி கையில் வைத்துக் கொண்டு செல்வேன். அந்த வயதில் கலைஞர் மீது கொண்டிருந்த ஈர்ப்பின் காரணமாக, அரசியல் சாகச மனநிலையாக அதை நினைத்துப் பார்க்கிறேன்.

**அந்த நிமிடத்தில் இருந்து அவரை என் தந்தையாகவே கருதுகிறேன். அப்போது முதல் கலைஞரும் என்னை மகனைப் போலவே நடத்தினார்.**

## ‘இனி’ தொடக்கமும் வருத்தமும்

பிறகு, நீண்ட இடைவெளி. 1983-ஆம் ஆண்டு ஈழத்தமிழர் ஆதரவு இயக்கங்களில் நான் செயல்படத் தொடங்கினேன். 1987-ஆம் ஆண்டு திலீபன் மரணத்துக்குப் பின்னர், ‘ஈழத் தமிழர் உரிமைப் பாதுகாப்புக் கூட்டமைப்பு’ என்கிற அமைப்பினை இயக்குநர் வி.சி.குகநாதன், கவிஞர் மு.மேத்தா மற்றும் பல்வேறுபட்ட ஆளுமைகள் இணைந்து உருவாக்கினோம். அதற்கு நான் ஒருங்கிணைப்பாளராக இருந்தேன். அந்த அமைப்பின் மூலம் பல போராட்டங்களை முன்னெடுத்தபோது கலைஞரை சென்று பார்க்கிறோம்.

சென்னையில் இருந்து கன்னியாகுமரி வரை பயண நிகழ்ச்சி ஒன்றை, கலைஞர் தொடங்கி வைத்தார். அதன் பின்னர், பாரிமுனையில் இருந்து கிண்டி வரை மனிதச் சங்கிலிப் போராட்டத்தை நடத்தினோம். அதையும் கலைஞர்தான் தொடங்கி வைத்தார். அதற்கு அடுத்த நாள் எங்களை அழைத்தவர், தி.மு. கழகத்தின் சார்பில் தமிழ்நாடு முழுவதும் மனிதச் சங்கிலிப் போராட்டம் நடத்த உள்ளதாகக் கூறினார்.

அதன் பின்னர், 1991-ஆம் ஆண்டு நவம்பர் 26-ஆம் தேதி, பிரபாகரன் பிறந்த நாளில் **‘இனி’** என்கிற பத்திரிகையைத் தொடங்கினோம். அந்த ஏட்டுக்கு **‘முரசொலி’**யில் விளம்பரம் கொடுத்தோம். “இது நடுநிலை ஏடு அன்று, எல்லா கடைகளிலும் கிடைக்காது, தமிழ் இன எதிரிகள் இந்த ஏட்டினை வாங்க வேண்டாம்” என அதில் கூறியிருந்தோம். அதைப் பார்த்துவிட்டு தலைவர் கலைஞர் அழைத்தார். “எல்லாமே எதிர்மறை விளம்பரமா இருக்கேப்பா” என்றார். மேலும் “இனி, என்று பெயர் வைத்திருக்கிறீர்களே இது என்ன வினைச்சொல்லா” எனக் கேட்டார். அந்தப் பொருளில் அதுவரை யோசிக்காமல் இருந்தோம். அதன் முதல் இதழ் வந்தபோது, அவர் குறித்து எதிர்மறையாக வந்த கருத்துகளுக்காக என்னை வரவழைத்து, வருத்தத்தைப் பகிர்ந்து கொண்டார்.

## சிறையில் உருவான மனமாற்றம்

அதன் பின்னர் நான் தமிழ் தேசிய அரசியல் செயல்பாடுகளில் என்னை ஈடுபடுத்திக் கொண்டதால், ஏறத்தாழ பதினைந்து ஆண்டுகள் கலைஞர் அவர்களுடன் தூரமாகவே இருந்தேன். இன்னும் சொல்ல போனால் பல மேடைகளில் அவரை விமர்சனமும் செய்திருக்கிறேன். அதையெல்லாம் அவர் பொருட்படுத்தியதே இல்லை.

1991-ஆம் ஆண்டிலிருந்து 2003-ஆம் ஆண்டு வரை எட்டுமுறை ஈழ ஆதரவுக்காக கைது செய்யப்பட்டிருக்கிறேன். 2002-ஆம் ஆண்டில் பொடா சட்டத்தில் கைதாகி, ஒன்றரை ஆண்டுகள் சிறையில் இருந்தேன். அந்த சிறைவாசம்தான் எனக்குள் மாற்றங்களைக் கொண்டு வந்தது. வலுவான அரசியல் இயக்கம் தி.மு.க.தான், என்கிற முடிவுக்கு வந்தேன். அந்த கால கட்டத்தில் பொடா போன்ற சட்டங்களுக்கு எதிராகக் குரல் கொடுப்பவராக கலைஞர் இருந்ததை மறுக்க முடியாது.

## தந்தையும் மகனுமாக

பிறகு, எனது அரசியல் நிலைப்பாடுகளுக்காக, நான் இருந்த அமைப்புகளில் எதிர்ப்புகள் வந்தன. 2004-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க.வுக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்தேன். 2006-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின்போது, தி.மு.க.வுக்கு ஆதரவு நிலை எடுத்து, நான் சார்ந்திருந்த தமிழ் தேசிய அமைப்பில் இருந்து வெளியேறினேன். அப்போது கலைஞரை சந்திக்க ஓர் அழைப்பு வந்தது. “பதினைந்து ஆண்டுகள் அவரை எதிர்த்திருக்கிறேன், அவர் என்ன நினைப்பாரோ” எனத் தயங்கினேன். ஆனால், கலைஞரை சந்திக்கச் செல்லும் அன்று பெரு விருப்பத்துடன் கோபாலபுரம் வீட்டுக்குச் சென்றேன்.

அந்த சந்திப்பின் போது, ஒரு படம் எடுத்துக் கொள்ளலாம் எனப் பேச்சு வந்தபோது தலைவர் கலைஞர் இன்னும் தயாராகவில்லை என அருகில் இருந்தவர்கள் கூறினர். உடனே கலைஞர் “இருக்கட்டும் பரவாயில்ல, உங்க அப்பா இப்படித்தான இருப்பார்” என என்னை அன்பால் நிறைத்து விட்டார். அந்த நிமிடத்தில் இருந்து அவரை என் தந்தையாகவே கருதுகிறேன். அப்போது முதல் கலைஞரும் என்னை மகனைப் போலவே நடத்தினார். அவர் மறைவின்போது என் இரண்டாவது தந்தை இறந்துவிட்டார் என்றே எழுதினேன்.

## காந்தம் இழுத்தத் துகள்!

2006-ஆம் ஆண்டில், நான் தி.மு.க.வுக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்யப்போகிறேன் என்றதும், எந்தெந்த இடங்கள் எனக் கேட்டுக்கொண்டு, உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தார். அதேபோல 2009-ஆம் ஆண்டு தேர்தலின்போதும் எனது பயணத் திட்டங்களைக் கேட்டுக் கொண்டு, பிரச்சாரக் கூட்டங்களில் கவனமாகவும், பாதுகாப்பாகவும் இருக்குமாறு அறிவுறுத்தி அனுப்பி வைத்தார்.

அவரைச் சந்தித்த தொடக்கக் காலத்தில் தயக்கமாகவும், போகப் போக இயல்பாகவும் உரையாடல் நடந்தது. வாரத்தில் இரண்டு நாட்களாவது அவரை சந்தித்து விடுவேன். பரபரப்பான நேரமாக இருக்கும். அந்த நேரத்தில் ஏதாவது ஒரு நூல் குறித்து பேச்சு எழுந்து அப்படியே நீண்டுவிடும். இப்படிப் பல நிகழ்வுகள் நடக்கும். சில நேரங்களில் நானும் அண்ணன் துரைமுருகன் அவர்களும் பேசிக்கொண்டிருந்தால், “என்னய்யா நீங்க மட்டும் தனியா பேசிக்கிறீங்க” என்பார். ஒருமுறை எனது திருக்குறள் விளக்கத்தைக் கேட்டு மிக மகிழ்ச்சியோடு சிலாகித்துப் ‘புதிய விளக்கம்’ எனப் பாராட்டினார்.

2008 -ஆம் ஆண்டு என் அப்பாவின் நூற்றாண்டு விழாவில் அவர் ஆற்றிய உரை என்னை மிகவும் நெகிழவைத்தது. நான் அவரைத் தாக்கிப் பேசிய காலங்களில் என்னை விசாரித்ததுடன், “இராம சுப்பையா அண்ணனின் மகனா என்னைத் தாக்கிப் பேசுவது என அறிந்து என்னால் நம்பவே முடியவில்லை. அதன் பின்னர் அவர் வந்து என்னைச் சந்தித்தபோது காந்தமும் இரும்பும்போல ஒட்டிக்கொண்டோம்” என்றார். நான் அப்போது குறிப்பிட்டேன். “அவர் காந்தம். அவரோடு ஒட்டிக்கொண்ட பல நூறு இரும்புத் துகள்களில் நான் ஒரு துகள்”. அந்தச் சொற்கள் ஆண்டுகள் கடந்தும் நிலைக்கும்.

...பகிர்வார்கள்

## புத்தக வடிவில் ‘பராசக்தி’



**த**மிழ்த் திரைப்பட உலகத்தைப் புரட்டிப் போட்ட படங்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது, முத்தமிழறிஞர் கலைஞர் திரைக்கதை, வசனம் எழுதிய ‘பராசக்தி’. படம் வெளியாகி 70 ஆண்டுகளுக்குப் பிறகும், இப்போது பார்த்தாலும் பல அதிர்வலைகளை ஏற்படுத்தும். அந்தப் படத்தின் கதாபாத்திரங்கள், திரையில் பேசிய பல விஷயங்களை, பின்னாளில் தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் அரசுக் கோப்புகளில் இடம்பிடிக்கச் செய்தார் கலைஞர். அதுதான் அவரது பேனாவின் வலிமை.

அந்தப் படத்தின் வசனங்கள், ஒரு தலைமுறையின் பொன்மொழிகள். திரையில் ஜொலிக்கத் துடித்த பலருக்கு மனப்பாடப் பகுதி. பாடலாசிரியர்கள் நீங்கலாக, திரை எழுத்தாளர்களுக்கு எனத் தனித்த மரியாதையை ஏற்படுத்தித் தந்ததில் கலைஞரின் திரைக்காவியங்களுக்குப் பெரும் பங்குண்டு. ஆண்டாண்டு காலமாகப் பார்த்தும் கேட்டும் ரசித்த அந்த வசனங்களை இப்போது படித்துச் சிலிர்க்கவும் முடியும். ஆம்... ‘பராசக்தி’ படத்தின் திரைக்கதை, வசனம் தற்போது அழகிய வடிவத்தில் நூலாகி இருக்கிறது. இதனை ‘டி-ஸ்டாக்’ பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

திரைப்படம் வந்த அந்தக் காலத்திலேயே கதை வசனப் புத்தகமும் வந்தது என்றாலும்கூட, கலைஞரின் சிந்தனைகளும் சாதனைகளும் மிக வேகமாக, பரவலாக எடுத்துச் செல்லப்பட வேண்டிய இந்தக் காலத்தில் இந்தப் புத்தகம் வந்திருப்பது காலத்தின் தேவை!

## :.ப்ளாஷ்பேக்



### புகைப்படக்கார உடன்பிறப்பு!



இராமதாஸ்

**மு**த்தமிழறிஞர் கலைஞர், பேராசிரியர் பெருந்தகை, தலைவர் தளபதி ஆகியோரின் பிறந்த நாட்களின்போது அவர்களது இல்லத்துக்கு வந்து வாழ்த்து சொல்ல வருபவர்களைப் புகைப்படம் எடுப்பது ஓர் உடன்பிறப்பாக எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை வழங்கியது. 1986-ஆம் ஆண்டு கலைஞர் அவர்களின் பிறந்தநாளில் புகைப்படம் எடுத்துவிட்டு கீழே வந்தபோது தாழ்வாரத்தில் அன்றைய இளைஞர் அணி செயலாளரும் இன்றைய கழகத் தலைவருமான தளபதி அவர்களை சந்திக்க நேர்ந்தது. ‘உங்களைக் கட்டிப்பிடித்துப் புகைப்படம் எடுத்துக்கொள்ள வேண்டும்’ என்று அவரிடம் அனுமதி கேட்டதும் மிகச் சாதாரணமாக ஒப்புக்கொண்டதை, இன்றைக்கு நினைத்தாலும் வியப்பாக இருக்கிறது.

**-ஆ.இராமதாஸ், ஆலந்தூர் தெற்குப் பகுதி, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.

அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

### கருவூலம்

### இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள்!

**1938 ஆம் ஆண்டு, இந்தி எதிர்ப்பின் முதல் கட்டப் போராட்டம் பெரியார் தலைமையில் தொடங்கியது. சுயமரியாதை இயக்கம், நீதிக்கட்சி, தனித் தமிழ் இயக்கம் ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்திய இந்தப் போராட்டம் 1940 ஆண்டு வரை நீடித்தது. இரண்டாம் கட்டப் போராட்டம் திராவிடர் கழகம் சார்பாக, பெரியார் தலைமையில் 1948 – 50 ஆண்டுகளுக்கு இடையில் நடைபெற்றது. 1952 ஆம் ஆண்டில் மூன்றாம் கட்டப் போராட்டம், திராவிடர் கழகம், தி.மு.கழகம் ஆகியவை தனித் தனியாக நடத்தின.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 304




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.